வடமேல் மாகாண சபை 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வடமேல் மாகாண சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடமேல் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2022 ஆண்டில் தீயிட்டு அழித்திருந்த ஆளுநரின் அலுவலத்திற்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 24,970,000 பெறுமதியான லேண்ட் ரோவர் டிஸ்கவரி வண்டியின் கிரயத்தை பதிவழிக்க அனுமதி வழங்கப்படாத காரணத்தால் தொடர்ந்தும் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்துள்ளமை தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்தி இருக்கவில்லை.	ஆவணங்களிலிருந்து அகற்ற பிரதான செயலாளரினால் அங்கீகாரம் வழங்கப்படாததால், கணக்கு அலகு இணக்கத்தின் கீழ் வாகனத்தின் அகற்றிய பெறுமதியை மீண்டும் உட்படுத்தியுள்ளதென.	உள்ளவாறான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

(ஆ)	வடமேல் மாகாண கல்வி திணைக்களத்தின் கூட்டுத் தொகை ரூபா 16,956,802,973 ஆன 06 சொத்து வகைகளின் மீதிகளை உறுதி செய்து கொள்வதற்கான நிலையான சொத்து பதிவேடு மற்றும் துணை ஏடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2024 ஆண்டிற்குரிய குறித்த ஆவணங்கள் கடிதக் கோவையில் இணைத்துள்ளதாக மற்றும் 2024 ஆண்டில் தளவாடங்கள், இலத்திரனியல் உபகரணங்களிற்காக செலவு செய்யப்பட்டிருக்கவில்லை.	குறித்த பதிவேடுகளை நாளாதுவரையாக்கி அட்டவணைகளை தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
(இ)	சுகாதார திணைக்களத்திற்கு சொந்தமான 31 காணிகளை மதிப்பிடாதமை மற்றும் 35 நிறுவனங்களின் கட்டிடங்களை மீள்மதிப்பீடு செய்யாததால் கணக்கீடு செய்திருக்கவில்லை.	மதிப்பீட் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து விரைவில் மதிப்பீட்டு அறிக்கையை பெற்று நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதென.	காணி மற்றும் கட்டிடங்களின் சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் விடுபட்டுள்ளனவா என்பதற்கான எனது அபிப்பிராயத்தை நியாயமான உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்கக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

1.5.1 தலைப்பு 202 – வடமேல் மாகாண ஆளுனர்

1.5.1.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை	இணங்காமை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 104(4) ஆம் பிரமாணம்	அலுவலக பாவனைக்கு வழங்கியிருந்த இலக்கம் 253-6132 கொண்ட வாகனம் 2002 ஒக் 11 ஆம் திகதி முழுமையாக தீப்பற்றி செதமடைந்ததால் ஏற்பட்டிருந்த நட்டம் தொடர்பாக நியமிக்கப்பட்டிருந்த விசாரணை குழுவின் 2005 மார்ச் 01 திகதிய இறுதி அறிக்கை பிரகாரம் நட்டம் ரூபா 550,000 ஆன போதும், குறித்த நட்டத்தை உரிய தரப்பினரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தற்போது இந்த வழக்கு தீர்ப்பு தொடர்பான அறிக்கை கிடைக்காததால், 2005 மார்ச் 01 திகதிய நட்டம் தொடர்பான அறிக்கை பிரகாரம் நட்டத்தை அறவிட சந்தர்ப்பம் கிடைக்கவில்லையென.	நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.2 தலைப்பு 210 - வடமேல் மாகாண பிரதம அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல். பொறியியல்சேவை. சட்டம் மற்றும் சமாதானம். கல்வி. உள்ளூராட்சி. மாகாண நிர்வாகம். பொருளாதார மேம்படுத்தல். சுற்றாடல் அலுவல்கள். நீர் வழங்கல். நீர் போக்குவரத்து மற்றும் சுற்றாடல் அலுவல்கள் தொடர்பான மாகாண அமைச்சர்.

1.5.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை	இணங்காமை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
1987 இன் 42 கொண்ட மாகாண சபை சட்டத்தின் 19(2) பிரிவு	மாகாண சபை நிதியத்தின் நிதி, சட்டத்தினால் ஏற்பாடு வழங்கியுள்ள பணிகளை	மாகாண சபை இருக்காத சந்தர்ப்பத்தில் மாகாண சபையின் பிரதான நிதி மற்றும் நிர்வாக	மாகாண சபை நிதியத்திற்கு இணங்க மற்றும் சட்டத்தால்

தவிர்ந்த வேறு பணிகளிற்கு பயன்படுத்த முடியாத போதும், அதற்கு இணங்காத வகையில் மாகாண சபை நிதி ரூபா 150 தொகை பிரதான அமைச்சின் ஊடாக குருனாகல மாநகர சபையில் செயற்படும் செயற்திட்டமொன்றிற்கு உரிய வெட் வரித் தொகை ஒப்பந்ததார நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்ய வழங்கப்பட்டிருந்தது.	அதிகாரியாக இருக்கும் வடமேல் மாகாண மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்களின் அங்கீகாரத்தின் மீது ரூபா 150 மில்லியனான முற்பணம் மாகாண சபை நிதியத்தால் குருனாகல மாநகர சபைக்கு வழங்கியுள்ளதென.	ஏற்பாடு வழங்கியுள்ள பணிகளிற்கு செலவிட வேண்டும்.

1.5.2.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு (ழுரவ ிரவ) மட்டம் அடையப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
செயற்திட்டத்தை ஆரம்பிக்க முன் சாத்தியப்பாட்டு ஆய்வினை சரியாக செய்யாத காரணத்தால் ஜனகலா நிலையத்தின் கேட்போர்கூடத்தை நிர்மாணிக்க 2017 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை செலவிட்டிருந்த ரூபா 209,673,158 ஆன செலவை போன்றே இந்த கட்டிடத்தை மீண்டும் நிர்மாணிப்பதற்காக 2021 மற்றும் மீளாய்வாண்டில் செலவிட்டிருந்த ரூபா 734,376 ஆன பத்திரிகை விளப்பரத்திற்கான செலவு விளைவற்ற செலவாக இருந்தது.	கேட்போர் கூடம் கட்டம 1 இற்காக ரூபா 205,967 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. ஐஐ கட்டத்திற்கு கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 813 மில்லியன் எனக் கருதி பெறுகைகள் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போதும் பொருத்தமான ஒப்பந்ததாரர் கிடைக்காமை மற்றும் கொவிட் தொற்று காரணமாக மீண்டும் பெறுகை நடவடிக்கைகளை செய்வதற்கு சந்தர்ப்பமொன்று இருக்கவிலலை. பின்னர் ஏற்பட் நிதி நெருக்கடி காரணமாக நிர்மாணத்தை இடைநடுவே நிறுத்தியதென.	சரியாக சாத்தியப்பாட்டு ஆய்வினை செய்யாது செயற்திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.3 தலைப்பு 211 - வடமேல் மாகாண உள்ளூராட்சி திணைக்களம்

1.5.3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
1995 மற்றும் 1996 ஆண்டுகளில் வடமேல் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிட்டிருந்த ரூபா 2,006,330 ஆன 03 மிகை அறவீட்டு சான்றிழ்கள் தொடர்பாக 2024 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஏற்றுக் கொள்வதென.	அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.4 தலைப்பு 212 - வடமேல் மாகாண பொறியியலாளர் திணைக்களம்,

1.5.4.1 ஒப்பந்த நிர்வகத்தின் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மண் மற்றும் சேற்றுப் படிவுகளை அகற்றுவது தொடர்பாக பிராந்திய பொறியியலாளர் அலுவலகம், கமநல சேவைகள் திணைக்களம், நீர்பாகன திணைக்களம் மற்றும் செயற்திட்ட அலுவலகத்திற்கு இடையே சிறந்த தொடர்பு இடம்பெறாததால் மண் மற்றும் சேற்றுப் படிவுகளை அகற்றுதல் சரியானவாறு ஒப்படைத்தல், பொறுப்பேற்றல் மற்றும் ஏலவிற்பனை செய்தல் இடம்பெறாததுடன் அதன் காரணமாக அரசிற்கு பெற்றுக் கொள்ள முடியுமாகவிருந்த ரூபா 6,784,392 வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	சுஹு"ரு நீர்பாச செயற்திட்ட ஆரம்பத்தில் மண் மற்றும் சேற்றுப் படிவுகளை அகற்றுவதில் தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மண் குளத்தின் பக்கத்தில் குவிக்கப்பட்டு இருந்ததால, கமநல சேவைகள் நிலையத்தை அறிவுருத்தி அவர்களின் பரிந்துரை பிரகாரம் மண்ணை அகற்றுவதென.	செயற்திட்டத்தை மேற்கொள்ளும் போது நிறுவனங்களிற்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பினை பேணிச் செல்ல வேண்டியதுடன் அரசிற்கு நன்மைதரும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.5 தலைப்பு 213 - வடமேல் மாகாண கல்வி திணைக்களம்

1.5.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை	இணங்காமை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாகாண நிதி விதி 54	2021 ஆண்டு முதல் கு/புனித குடுப்ப மகளிர் கல்லூரியில் ஏற்பட்டிருந்த நிதி மோசடி தொடர்பான அறிக்கை பிரகாரம் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் நிதி ரூபா 3,285,000 தொகை மற்றும் அன்பளிப்புத் தொகை ரூபா 50,000 ஆக கூட்டுத் தொகை ரூபா 3,335,000 இனை வங்கியில் இடப்படவில்லை என உறுதி செய்து கொண்டிருந்ததுடன், பின்னர் அத்தொகையை இனங்காண முடியாத பெறுவனவாக மீளாய்வாண்டு மார்ச் மாதத்தில் ரூபா 1,600,000 தொகை மற்றும் மே மாதத்தில் இன்னும் ரூபா 1,735,000 தொகையுமான பாடசாலை அபிவிருத்தி சங்க கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு இருந்த போதும் இந்த தற்காலிக நிதி மோசடிக்கு பொறுப் வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கொரோனா தொற்று காரணமாக பாடசாலை இடைக்கிடை நடாத்தப்பட்டதனால் மேற்குறித்த கல்வி ஆண்டுகளில் பாடசாலை ஆசிரியர்களின் மற்றும் மாணவர்களின் வருகை தொடர்ந்து இடம்பெறாமை மற்றும் அலுவலக நடவடிக்கைகள் இடைக்கடை நடைபெற்றமை, ஆசிரியர்களின் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள், பாடசாலை மாணவ ஆசிரியர் சுகாதார நிலைமையை மேம்படுத்த பல்வேறு வேலைத் திட்டங்களை நடாத்தும் பொறுப்பு போன்ற பொறுப்புவாய்ந்த கடமைத் தொகுதியொன்று அதிபரிற்கு ஒப்படைக்கப்பட்டு இருந்ததால் இவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளதென.	நிதி மோசடி தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்றை குறித்த தர்ப்பினர் தொடர்பாக ஒழுக்காற்று செயற்பாட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2017 மரர்ச் 29 திகதிய இலக்கம் ED/04/60/01/அ.படி / 2017 கொண்ட கல்வி அமைச்சின் செயலாளரின்	அதிபர் பதிவியில் பதிற்கடமை படி வழங்கப்பட வேண்டியது அதிபர் பதவி ஒன்றில் நிரந்தரமாக கடமையாற்றும் அல்லது	அதிபர்களின் பற்றாக்குறை காரணமாக பதிற்கடமைக்காக அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன்	அதிபர் சேவையின் உத்தியோகத்தர்களை சமப்படுத்தி அதிபர்களாக நியமிக்க

	கடடிதத்தின் 02 பிரிவினால் திருத்தப்பட்ட 2017 மரர்ச் 14 திகதிய இலக்கம் 16/2017 சுற்றறிக்கை	அப்பதவியில் பதிற்கடமை புரியும் இலங்ககை கல்வி நிர்வாக சேவையில், அல்லது இலங்கை அதிபர் சேவையின் 1, 2 மற்றும் 3 தரத்தில் சலுவையுடைய உத்தியோகத்தர் ஒருவரிற்கு ஆன போதும், அதற்கு இணங்காதவாறு வடமேல் மாகாண 08 வலைய கல்வி அலுவலகங்களில் பதிற்கடமையாற்றும் ஆசிரியர் சேவையின் 199 ஆசியர்களிற்கு ரூபா 35,572,900 ஆன படிகள் செலுத்தப்பட்டு இருந்தன.	, பதிற்கடமை படிகள் கொடுப்பனவு ஆளுநர் அவர்களின் அங்கீகாரத்தின் மீது மேற்கொள்ளப்பட்டுளள து.	நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அதிபர் படிகளை செலுத்தும் போது சுற்றறிககை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	கல்வி அமைச்சின் செயலாளரின் 2019 பெப்ரவரி 25 திகதிய இலக்கம் 05/2019 கொண்ட சுற்றறிக்கை	தரம் 05 புலமைப்பரிசில் செலுத்தும் நிகழ்நிலை நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்தும் போது பாடசாலை மூலம் நிரப்பப்பட்ட மாணவர் தகவல்களை தொகுதியின் சரியான தன்மையை உறுதி செய்து கொண்டு கொடுப்பனவு நடவடிக்கைகளிற்காக குறித்த வங்கிக் கிளைக்கு அனுப்புவது வலைய கல்விக் அலுவலகத்தின் பணியான போதும், புலமைப்பரிசில் பெறுபவர்களை சரியாக இனங்காண நடவடிக்கை எடுக்காததன் மீது 2022 ஏப்ரல் முல் மீளாய்வாண்டு வரை 03 வலைய கல்வி அலுவலகங்களில் 60 சந்தர்ப்பங்களிற்குரியதாக ரூபா 1,883,000 ஆன புலமைப்பரிசில் தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	பாடசாலை மூலம் கணக்கிலக்கத்தை பெற்றுக் கொண்ட பின்னர் குறித்த தொகையை விடுவிக்க நடவடிககை எடுக்கப்பட்டு வருகின்றது.	கால தாமதமின்றி புலமைப்பரிசில் நலனாளர்களிற்கு அத் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.5.2 பதவியணியினர் நிருவாகம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
08 வலைய அலுவலகங்களிற்கு உரியதாக அதிபர் தரத்தில் மொத்த வெற்றிட எண்ணிக்கை 598 ஆன போதும், குருனாகல வலையத்தில் அதிபர் தரத்தில் 57 பேர்களின் மிகை காணப்படுவதில் அதிபர் வெற்றிடங்கள் சமப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025 மே 26 திகதி முதல் வடமேல் மாகாணத்தில் இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் செயற்படுவதற்குரியதாக பிரதான அமைச்சரினால் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் குறித்த பெயர் பட்டியல் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளதென.	மிகையான அதிபர்களை சமப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.6 தலைப்பு 220 - வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், காணி, மின்சாரம், மின்வலு மற்றும் வலுசக்தி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள், கலாசார மற்றும் கலை அலுவல்கள், தகவல் தொழில்நுட்ப அலுவல்கள் தொடர்பான மாகாண அமைச்சு

1.5.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை	இணங்காமை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 ஒக்டோபர் 05 திகதி முதல் நடைமுறையாகும் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்கான நடைமுறை ஒழுங்கு விதிக் கோவையின் 05 ஆம் பிரிவின் ஹ (அ) பிரிவு	கூட்டுறவு சங்கங்களின் செயற்பாட்டு மூலதன பற்றாக்குறைக்கு தேவையான கடன் வசதிகளை வழங்க வேண்டிய போதும், 2024 ஆண்டில் வ/ப குருனாகல கூட்டுறவு மருத்துவசாலை சங்கத்தின் புதிய மருத்துவசாலை கட்டிடத்தின் மூன்றாம் கட்டத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 151,941,687 தொகை மற்றும் வ/ப தென்னை முக்கோணத்தின் பால் உற்பத்தியாளர்களிற்கு கூட்டுறவு சங்கத்தின்	கூட்டுறவு நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்கான நடைமுறை ஒழுங்கு விதிக் கோவையின் 05 ஆம் பிரிவின் ஹ (அ) பிரிவின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட குருனாகல கூட்டுறவு மருத்துவசாலை சங்கத்திற்காக ரூபா 151,941,687 கடன் தொகை 2.5 சதவீத வட்டியின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. புதிய மருத்துவசாலை கட்டிட நிர்மாண செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த இன் கடன்	நடைமுறை ஒழுங்கு விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சூரிய சக்தி செயற்திட்டத்திற்காக ரூபா 16,900,000 ஆக புதிய செயற்திட்டத்திற்காக கடன் வழங்கப்பட்டிருந்தது.	வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சங்க நிதியத்தின் அனைத்து கடன்களும் வழங்கப்படுவது சங்கங்களின் செயற்படு மூலதனத்தை கவனத்திற் கொண்டு செயற்படு மூலதனத்தை வழங்குவதற்காக ஆகும்.

1.5.7 தலைப்பு 221 - கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்.

1.5.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை	இணங்காமை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1983 இன் 32 மற்றும் 1992 இன் 11 இலக்க கூட்டுறவு சங்க திருத்திய சட்டங்களினால் திருத்தப்பட்ட 1972 இன் 05 இலக்க கூட்டுறவு சங்க சட்டத்தின் 58 மற்றும் 59 பிரிவுகள்	நடுவர் பிரச்சினையொன்றை நீதிமன்ற அதிகாரத்துடன் திரட்டிக் கொண்ட 2019 ஆண்டு முதல் 06 ஆண்டுகளிற்கு கிட்டிய காகலமாக நிலவிவரும் இன்னும் குறித்த சங்கங்களை இனங்கண்டு விடுவிக்காத 2024 திசெம்பர் 31 திகதி வரை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 58,298,132 ஆன மீதியொன்று குருனாகல உதவி ஆணையாளர் அலுவலகத்தில் தொடர்ந்தும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	(I) இந்த பெறுமதயினுள் 2024 ஆண்டில் விடுவிக்க வேண்டிய ரூபா 47,610,432 ஆன மீதியும் உள்ளடங்கியுள்ளது. (II) 2025 மார்ச் 31 திகதி வரை நிலவிய மொத்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 138,559,741 தொகையில் இருந்து 2024 ஜுன் 29 திகதி கூட்டுறவு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 22,500,000 இற்கு மேலதிகமாக 2024 திசெம்பர் 31 திகதியின் பின்னர் ரூபா 75,373,309 தொகை சங்கத்திற்கு விடுவித்துள்ளதென.	1972 இன் 05 இலக்க கூட்டுறவு சங்க சட்டத்தின் 58 மற்றும் 59 பிரிவுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	2018 ஒக்டோபர் 04 திகதிய அதிவிசேட வர்த்தமானி 2091/63 மூலம் திருத்தப்பட் விதிக் கோவையின் 43 (iv) பிரிவு	ஒவ்வொறு பதிவு செய்த சங்கங்களும் பதிவாளரினால் விதிக்கப்பட்டவாறு வருடாந்த தேறிய இலாபத்தின் 10 சதவீதத்திலும் குறையாத மற்றும் ரூபா 500 இற்கு குறையாத தொகையை கூட்டுறவு நிதியத்திற்கு பங்களப்புத் தொகையாக வருடாந்தம் செலுத்த வேண்டிய போதும், குருனாகல 08 பிரிவுகளில் 219 கூட்டுறவு சங்கங்களிலிருந்து பங்களிப்பு தொகையாக 2024 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 24,252,187 தொகையை மற்றும், சிலாபம் பிரிவில் 12 வலைய்ங்களின் சங்கங்களினால் 2025 மார்ச் 30 திகதி வரை ரூபா 1,113,522 தொகையை கூட்டுறவு நிதியத்திற்கு அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குருனாகல பிரிவிற்குட்பட்ட பலநோக்கு, பாடசாலை கூட்டுறவு விவசாய அநுசரனை சுவசக்தி மற்றும் ஏனைய கூட்டுறவு சங்கங்களின் மூலம் கூட்டுத் தொகை ரூபா 24,252,187 தொகை மேலும் அறவிடப்படவுள்ளதாக மற்றும் சிலாப பிரிவுவின் 12 கூட்டுறவு சங்க வலையங்களிற்குரிய 2023 திசெம்பர் 31 திகதிக்கு ஓராண்டை விஞ்சிய நிலுவை மீதியை அறவிட்டு வருவதென.	1972 இன் 05 இலக்க கூட்டுறவு சங்க சட்டத்தின் 43(1) மற்றும் 1973 கூட்டுறவு விதி 43(II) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	1972 இன் 05 இலக்க கூட்டுறவு சங்க சட்டத்தின IX ஆம் பிரிவின் 58 மற்றும் 59 பிரிவுகள் மற்றும் 1973 கூட்டுறவு சங்க விதிக் கோவை இலக்ககம் 49((V)(இ) மற்றும் (ஈ) பிரிவு	கடன் பிரச்சினையை தீர்ப்பதற்கு நியமிக்கப்பட்ட தீர்ப்பாளரொருவர் தீர்ப்பை எடுத்து உடனடியாக செயற்பட்டு விசாரணையை நிறைவு செய்து தான் நியமிக்கப்பட்டு மூன்று மாதங்களினுள் தீர்வை வழங்க வேண்டிய போதும், கடன் பிரச்சினையை தீர்ப்பதற்காக 2025 மே 30 திகதி வரையும், 07 தீர்வாளர்களிற்கு வழங்கி இருந்த பெறுமதி ரூபா 3,321,479 ஆன கடன் பிரச்சினைகளிற்குரிய 23 கோவைகள் மற்றும் ஒரு சில தீர்பாளர்களினால் செயற்பட்ட பெறுமதி ரூபா 5,714,764 ஆன 05 கோவைகளிற்காக நியமித்து 02 மாதங்கள் முதல் 34 மாதங்கள் வரையான காலம் கடந்துள்ள போதும் தீர்ப்பு வழங்கப்படவில்லை.	இந்த பிரச்சினைகாக கால நீடிப்பை பெற்று விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இரு தரப்பினரும் விடயங்களை முன்வைத்தல் மற்றும் தர்ப்பினரின் முன்னைய நாளை ஒதுக்கிக் கொள்ளல் தொடர்பான பிரச்சினை காரணமாக விரைவில் பிரச்சினைகள் தீர்வதில்லையென.	1973 கூட்டுறவு சங்க விதிக் கோவை இலக்ககம் 49(V)(ஈ) பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ)	கூட்டுறவு சங்க விதிக்காக மேற்கொள்ளப்பட்ட திருத்த வர்தமானியின 43 (X) பிரிவு	கணக்காய்வு அறிக்கையை சங்கத்திற்கு ஒப்படைத்த திகதியிலிருந்து 06 மாதங்களிற்குள் பங்களிப்புத் தொகையை செலுத்தாததன் மீது கடக்கின்ற ஒரு மாதத்திற்கு 01 சதவீத வீதம் தண்டப்பணம் அறவிட வேண்டிய போதும் குளியாபிடிய வலையத்திற்குரிய 19 சங்கங்கள் மற்றும் குருனாகல வலையத்திற்குரிய 19 சங்கங்களில் முறையே ரூபா 608,001 மற்றும் ரூபா 394,010 ஆக கூட்டுத் தொகை ரூபா 1,002,011 இனை 2024 ஜுலை 30 திகதிக்கு தண்டமாக அறவிட வேண்டியதாக இருந்தது.	இதன் பின்னர் கூட்டுறவு நிதியம் ஒதுக்கி 06 மாதங்கள் கடக்க முன்னர் கூட்டுறவு பிராந்திய உத்தியோகத்தர் மூலம் அறவிட தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதென.	கூட்டுறவு சங்க விதிக்காக மேற்கொள்ளப்பட்ட திருத்த வர்தமானியின 43 (X) பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.7.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சிலாபம் கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்திற்குரியதாக நீதிமன்றத்தினால் அறவிடப்பட்ட தண்டப்பணத்திலிருந்து செலுத்துவதற்காக திட்டவட்டமாக இனங்காண முடியாத 76 வழக்குகளிற்குரியதாக ரூபா 984,322 ஆன மீதிகள் காணப்பட்டதுடன் இந்த மீதியினுள் 2021 முதல் 2024 ஆண்டுகள் வரையான மீதிகள் நிலவின.	இனங்காண நீதிமன்ற தண்டப்பணத்தை இனங்காண்பதற்காக தகவல்களை அனுப்புமாறு குறித்த நீதிமன்ற பதிவாளர்களிற்கு அறிவித்துள்ளதுடன், உறுதிப்படுத்தல் கிடைத்த பின்னர் உரித்தற்றதாக உறுதியாகும தொகையை மீண்டும் நீதிமன்றத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதென.	நீதிமன்ற தண்டப்பணத்தை குறித்த கூட்டுறவு சங்கங்களை இனங்கண்டு விரைவில் வழங்க வேண்டும்.
(ஆ)	1983 இன் 32 மற்றும் 1992 இன் 11 இலக்க கூட்டுறவு சங்க திருத்திய சட்டங்களினால் திருத்தப்பட்ட 1972 இன் 05 இலக்க கூட்டுறவு சங்க சட்டத்தின் 58 பிரிவின் பிரகாரம் 2023 ஆண்டு முதல் நிலவிவரும் 1931 கோரிக்கைகளும், உள்ளடங்களாக 3704 கோரிக்கைகள் நீதிமன்றத்தில் அமுல்படுத்த கிடைத்திருந்ததுடன் ஆண்டிறுதி வரை மேலும் நீதிமன்ற அமுல்படுத்தாத 1,866 நடுவர்	நீதிமன்றப்படுத்தல கனிசமான அளவு குறைந்து காணப்படுவது சில நீதிமன்றங்களில் நீதிமன்ற அமுலாக்கல் கையேற்பை மட்டுப்படுத்தியுள்ளதால் ஆகுமென.	நீதிமன்ற அமுலாக்கல் அற்ற நடுவர் பிரச்சினை கோரிக்கைகளை விரைவில் நீதிமன்றத்தில் அமுலாக்க வேண்டும்.

	பிரச்சினை கோரிக்கைகள் காணப்பட்டன.		
(இ)	வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சினால் சிறிய மற்றும் நடுத்தர அரசி ஆலை உரிமையாளர்களிற்கு விரைவில் கடன் நிவாரணம் வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் சுழற்சி கடன் நிதியமாக எதிர்காலத்தில் செயற்பாடாதிருக்கவும், ஆணையாளர்களிடமுள்ள கடன் தொகையை மீண்டும் விநியோகிக்காதிருக்கவும், அறவிட்டுள்ள அனைத்து தொகையையும் மீண்டும் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு ஒப்படைக்குமாறு அறிவுரை வழங்கியிருந்த போதும் 2024 சனவரி 29 ஆம் திகதி திணைக்களத்திற்கு ரூபா 08 மில்லியன் தொகை உணவு ஆணையாளரிற்கு ஒப்படைககாது 2025 ஏப்ரல் 24 திதகி வரை 09 மாதங்களிற்கு அதிக காலம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	பொது வைப்புக் கணக்கில் காணப்படும் ரூபா 08 மில்லியன் தொகையை உணவு ஆணையாளரிற்கு அனுப்புவதற்காக நடவடிக்கை எடுப்பதுடன், இதனை சுழற்சி கடனொன்றாக செயற்படுவதால் உணவு ஆணையாளர் வழங்கும் நேரடி அறிவுரை பிரகாரம் இடைத்தரகர் சேவை ஒன்றை மாத்திரம் இந்த திணைக்களம் வழங்குவதென.	பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்துள்ள தொகையை உணவு ஆணையாளரிற்கு ஒப்படைக்க வேண்டும்.

1.5.7.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆண்டு ஆரம்பத்தில் நிலவி தீர்க்கப்படாத 590 நடுவர் பிரச்சினைகளும் நடைமுறை ஆண்டில் கிடைத்த 2,694 நடுவர் பிரச்சினைகளும் உள்ளடங்களாக 3,284 பிரச்சினைகளும் மீளாய்வாண்டில் 2310 பிரச்சினைகள் அளவு தீர்க்கப்பட்டிருந்தன.	கையிறுப்பிலுள்ள 940 பிரச்சிகைகளில் 2025 மார்ச் 31 திகதி வரை வழங்கப்பட்ட 629 கோவைகள் அலுவலகத்திற்கு கிடைத்துள்ளதுடன், 227 அளவான கோவைகள் நடுவர்களின் பொறுப்பில் தீர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மற்றும் பிரச்சினை கோவையொன்றை தீர்ப்பதற்காக கூட்டுறவு விதிக் கோவையின் 49(V) (இ) பிரிவின் பிரகாரம் மூன்று மாத காலம் வழங்கப்படுவதுடன், அதன் பிரகாரம் பதிவாளரினால் தான் புரிந்து கொள்ளம் அளவிற்கு காலத்தை நீடிப்பார்ரென.	தீர்க்கப்படாத நடுவர் பிரச்சனைகளை கூட்டுறவு விதிக் கோவை 49(v) (இ) பிரிவின் பிரகாரம் தீர்க்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.7.4 வெளிப்படையான முறைகேடுக்ள

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வியாகார வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சினால் சிறிய மற்றும் நடுத்தர அரசி ஆலை உரிமையாளர்களிற்கு கடன் நிவாரணம் வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்ட அரசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்திற்கு கட்டம் 04 இன் கீழ் ரூபா 82 மில்லியனும், குருனாகல மாவட்ட அரசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்திற்கு கட்டம் இன் கீழ் ரூபா 69 மில்லியனும் வழங்கி இருந்த போதும் 2025 ஏப்ரல் மாத இறுதி வரை புத்தளம் மற்றும் குருனாகல ஆகிய இரண்டு சங்கங்களின் நிலுவையாக காணப்பட்ட தொகை முறையே ரூபா 74 மில்லியன் மற்றும் ரூபா 69 மில்லியனாக கூட்டுத் தொகை ரூபா 143 மில்லியனாகும்.	உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் இந்த கூட்டுறவு சங்கங்களிற்கு வழங்க கடன் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் இந்த விடயத்தில் இடைத்தலையீட்டாளராக மாத்திரம் செயற்பட்டுள்ளது.	குருனாகல, புத்தளம் மாவட்ட அரசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்துடன கைச்சாத்திட்ட உடன்படிக்கை நிபந்தனைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	கூட்டுறவு சங்கத்துடன கைச்சாத்திட்ட உடன்படிக்கை பிரகாரம் கடன் தொகை வழங்கிய திகதியிலிருந்து 06 மாதங்கள் கடக்க முன்னர் காலம் கடந்த கடனிற்காக மாதாந்தம் 1.5 சதவீதப் படி தாமதக் கட்டணம் அறவிடாததால் 2023 திசெம்பர் முதல் 2024 ஆண்டு வரை குருனாகல சங்கத்திற்கு விடுவித்த ரூபா 25 மில்லியன் கடன் காலதாமதம் காரணமாக அறவிட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 4,920,000 மற்றும் புத்தளம் மாவட்ட சங்கத்திற்கு விடுவித்த ரூபா 22 மில்லியனிற்காக ரூபா 2,160,000 உள்ளடங்களாக ரூபா 7,080,000 ஆன தாமதக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் இந்த கூட்டுறவு சங்கத்திற்கு வழங்குவதற்காக கடன் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. வடமேல மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் இந்தப் பணியில் இடைத்தலையீட்டாளராக மாத்திரம் செயற்பட்டுள்ளது.	குருனாகல, புத்தளம் மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களும் கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கை நிபந்தனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.8 லைப்பு 222 - காணி ஆணையாளர் திணைக்களம்.

1.5.8.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நீண்ட கால குத்தகை அடிப்படையில் பயன்படுத்த 198 விண்ணப்பதாரர்களிற்கு உரிய ஹெக்டயார் 852.15 காணி அளவு குடியிறுப்பு, விவசாய, வர்த்தக, ஏனைய விடயங்கள் மற்றும் அரச நிறுவன தேவைப்பாட்டிற்காக பிரதேச செயலாளர்களின் மற்றும் வடமேல் மாகாண காணி ஆணையாளரின் பரிந்துரையுடன் அங்கீகாரத்திற்காக காணி ஆணையாளரிற்கு சமர்ப்பித்து 01 மாதம் முதல் 08 ஆண்டுகள் வரையான காலம் கடந்துள்ள போதும், 2024 நவம்பர் 18 திகதி வரை காணி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்திருக்காததால் நீண்ட கால குத்தகை உடன்படிக்கைகளை தயாரிக்க தாமதித்தல் மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய நீண்ட கால குத்தகை உரியவாறு அறவிட முடியாதிருந்தது.	நீண்ட கால குத்தகை அங்கீகாரத்திற்காக காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பித்துள்ளதென.	காணி ஆணையாளரிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகளை எடுக்க வேண்டும்.

1.5.9 தலைப்பு - 231 சுகாதார சேவைகள் திணைக்களம்.

1.5.9.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 22.1 உப பிரிவு	புத்தளம் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்திற்கு சொந்தமான வைத்தியசாலைகளில், ஆரம்ப மருத்துவ பராமரிப்பு அலகுகளில் மற்றும் சுகாதார	பதில் வழங்கப்படவில்லை .	தாபன விதிக் கோவை பிரகாரம் மேலதிக காலத்திற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

	மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களில் உத்தியோகர்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஒழுக்காறு விசாரணைகளின் போது அங்கீகாரமின்றி மேலதிக காலத்தை எடுத்திருந்த போதும், ஒழுக்காற்று விசாரணை அறிக்கையை வழங்க நடவடிக்கை எடுக்காத 08 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.		ஒழுக்காற்று விசாரணை அறிக்கையை விரைவில் வழங்க வேண்டும்.

1.5.9.2 முகாமைத்துவ பலவீனலங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை வடமேல் மாகாண சுகாதார திணைக்களத்தின் கீழ் புத்தளம் மற்றும் குருனாகல மாவட்டங்களில் காணப்படும் சுகாதார நிறுவனங்களில் காலாவதியான மருந்துகளின் பெறுமதி ரூபா 873,597 மற்றும் தரம் இன்றிய மருந்துகளின் பெறுமதி ரூபா 268,624 ஆனது.	பதிலை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்கள் இடமிருந்து விரைவில் பெற்று சமர்ப்பிப்பதென.	மருந்துகள் காலாவதியாக முன்னர் தேவையான வைத்தியசாலைகளிற்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டிமை மற்றும் காலாவதியான மற்றும் தரம் இன்றிய மருந்துகளை பராதீனம் செய்ய நடடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	கல்கமுவ ஆதார வைத்தியசாலையில் கழிவு நீர்த் தொகுதி சுத்திகரிப்பு சேவைக்காக ஏதேனும் திட்டவட்டமான நிறுவனத்துடன் மீளாய்வாண்டில் உடன்படிக்கை செய்யாததன் மீது உரிய காலத்தினுள் சேவை செய்வதனை மேற்கொள்ள முடியாததை போன்றே மீளர்யவாண்டில் ரூபா 10,374,560 தொகை செலவில் திருத்த் வேலைகளை மேற்கொள்ள நேரிட்டிருந்தது.	பதில் பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்களிடமிருந்து கிடைக்கவில்லையென.	சேவை உடன்படிக்கையிற்கு உட்பட வேண்டும்.

(இ)	குருனாகல பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய இரண்டு வாகனங்கள் விபத்திற்குள்ளாகி முறையே 3 ½ ஆண்டுகள் மற்றும் 02 ஆணடு 03 மாங்கள் கடந்துள்ள போதும் ஆரம்ப விசாரணைகள் முடிவடைந்து ஒழுக்காற்று நடவடிக்கைள் முடிவடையாததால் கூட்டுத் தொகை ரூபா 18,334,550 நட்டத்தை குறித்த பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட்டிருக்கவில்லை.	டுறு - 1790 நோயாளர் வண்டி இதனூடாக வண்டியின் நட்டமான ரூபா 11,705,970.15 தொகையை (திணைக்கள கட்டணம் 25 சதவீதத்துடன்) அதன் சாரரியான திரு சீ.டீ.எம்.ஜே.விஜேபண்டார என்பவரால் செலுத்தாததால் அத் தொகையை அறவிடுவது தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ரிதீகம சுகாதார சேவை உத்தியோகத்தர் அலுவலகத்திற்குரிய இலக்கம் ீநு – 4736 இலக்க கெப் வண்டியின் சாரதி நீதவான நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் குற்றமற்று விடுவிக்கப்பட்டுள்ளதென.	ஒழுக்காற்ற விசாரணையை விரைவில் நிறைவு செய்ய மற்றும் நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.10 தலைப்பு 232 - வடமேல் மாகாண ஆயுர்வேத திணைக்களம்.

1.5.10.1 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 மார்ச் 05 திகதி சுகாதார அமைச்சின் செயலாளரின் இலக்கம் 2024/06-01 கொண்ட சுற்றறிக்கை பிரகாகரம் ஜப்பான் நாட்டின் மானியத்தின் கீழ் ஆயர்வேத திணைக்களத்திற்கு வாகனம் மற்றும் மின்பிறப்பாக்கி இற்காக 1,630 லீற்றர் எருபொருளாக வருடாந்தம் 19,560 பெற்றுக் கொள்ள முடிமாக இருக்கும் போது 2024 ஆண்டில் அந்த மானியத்தின் கீழ 7,803 லீற்றர் மாத்திரம் பெற்று திணைக்கள செலவின விடயத்தின் மூலம் ரூபா 1,651,650 எரிபொருளிற்காக செலவிடப்பட்டிருந்தது.	திணைக்களத்திற்குரிய 07 வாகனங்களிற்காக தினந்தோறும் எரிபொருள் வழங்கப்படுகின்றது. முஊ – 1789 கார் வண்டிக்கு தேவையான பெட்றல் இந்த முறையின் கீழ் வழங்கப்படாததுடன் அது சாதாரண எரிபொருள் வழங்களாக மேற்கொள்ளப்படுகின்றது.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.11 தலைப்பு 233 - வடமேல் மாகாண சமூக சேவைத் திணைக்களம்.

1.5.11.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை	இணங்காமை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
தாபன விதிக்கோவை ஐஐ ஆம் அத்தியாயத்தின் 13.7 பிரிவு	வடமேல் மாகாண சமூக சேவைத் திணைக்களத்தில் அங்கீகார கணக்காளர் பதவியொன்று இல்லாதிருக்கும் போது கணக்காளர் ஒருவரிற்கு கடமை மேவுகைக்காக 2013 ஏப்ரல் முதல் 2024 திசெம்பர் வரையான காலத்தில் ரூபா 1,392,982 தொகை கடமை மேவுகை படிகள் செலுத்தப்பட்டிருந்தது.	வடமேல் பிரதான செயலாளரின் மற்றும் வடமேல் ஆளுநரின் செயலாளரினன் அங்கீகாரத்தின் பிரகாரம் கடமை மேவுகை படிகளை செலுத்தியதென.	தாபன விதிக்கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.11.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
வெவோதாகம் முதியோர் இல்லத்தில் சுகாதார நிதிய கணக்கிற்கு 2010 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை 07 தடவைகளில் ரூபா 1,100,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அத் தொகையை சுகாதார நிதிய நோக்கமான இல்லத்தின் சுகாதார வசதிகளை பேணிக் கொள்ள ஈடுபடுத்தாது ரூபா 1,063,160 தொகை பல ஆண்டுகளாக கணக்கில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.	வெவோதாகம் முதியோர் இல்லத்தில் சுகாதார நிதியத்தை இல்லத்தின் சுகாதார நிலைமையை நன்றாக பேணிக் கொள்வதற்காக பயன்படுத்த அறிவுரை வழங்கப்பட்டது.	சுகாதார நிதிய நோக்கத்தை அடைந்து கொள்ள நிதி ஈடுபடுத்தப்பட வேண்டும்.

1.5.12. தலைப்பு 234 - நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்.

1.5.12.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை	இணங்காமை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை II ஆம் அத்தியாயத்தின் 13.7 பிரிவு	வடமேல் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தில் அங்கீகார கணக்காளர் பதவியொன்று இல்லாதிருக்கும் போது, அப் பதவியில் கடமை மேவுகைக்காக 2019 ஜுலை 15 முதல் 2024 திசெம்பர் 31 வரையான காலத்தில் ரூபா கடமை மேவுகை படியாக ரூபா 761,520 செலுத்தப்பட்டிருந்தது.	தாபன விதிக் கோவை II ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் இப் பதவி வெற்றிடமான பதவி ஒன்றல்லாத போதும், கௌரவ வடமேல் ஆளுநரின் அங்கீகாரத்தின் கீழ் கணக்காளர் பதவியில் கடமை மேவுகைக்காக மேற்கொண்டு நியமனமொன்றாகும். அந்த அங்கீகாரத்தை வழங்கும் போது, இலங்கை கணக்காளர் சேவையின் III ஆம் தரத்தின் ஆரம்ப சம்பளத்தின் ¼ ஆகுமாறான படியொன்றை செலுத்த கௌரவ ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் கிடைத்துள்ளதால் அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.	தாபன விதிக்கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.12.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
வெளிநாட்டு அமைச்சின் குருனாகல பிரதேச கொன்சியுளர் அலுவலகத்தை அமைப்பதற்காக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின்	2025 மார்ச் 03 திகதி உடன்படிக்கை கைச்சாத்திட இரண்டாம் தரப்பினரிற்கு அனுப்பியுள்ளதென.	மதிப்பீடு செய்து நில வாடகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மூன்றாம் மாடியின் ஒரு பகுதியை 2021 ஜுலை 27 திகதி முதல் வழங்க உடன்படிக்கை கைச்சாத்திட்ட போதும் வாடகை கட்டணம் அறவிடுவது தொடர்பில் நிபந்தனைகள் உள்ளடக்கப்படாததால் 04 ஆண்டு காலமாக எவ்வித வாடகை கட்டணமும் அறவிடப்படாததுடன், 2024 ஆண்டு ஆரம்பம் முதல் 03 ஆண்டுகளிற்கு ரூபா 60,000 தொகை மாதாந்த வாடகை மதிப்பிடப்பட்டிருந்த போதும், 2025 ஜுலை 30 வரை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை.

1.5.12.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் 2022 ஆண்டில் மாகாண நிச்சய அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 4,866,842 செலவில் மீகளேவ அமில செலவன சிறுவர் இல்ல வளவில் நிர்மாணிக்கப்பட்ட திருமணமாகாத கர்பிணித் தாய்மார்களுக்கான பராமரிப்பு நிலையம் பதவியணியினர் பற்றாக்குறை காரணமாக செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியாது விளைவற்று காணப்பட்டது.	எதிர்காலத்தில் பதவியணிளை ஆட்சேர்த்த பின்னர் சிறுவர் தாய்மார்களை நிறுத்த எதிர்பார்ப்பதென.	பராமரிப்பு நிலையத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.13. தலைப்பு 241 - மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம்

1.5.13.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை	இணங்காமை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 571 (2) ஆம் பிரமாணம்	திணைக்களத்தில் வைப்புச் வெய்த திகதி முதல் 02 ஆண்டுகள் நடந்துள்ள ரூபா 6,248,991 பெறுமதியான 15 காலாவதியான வைப்புக்களை தீர்ப்பதற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	07 செயற்திட்டங்களிற்கு உரியதாக உடன்படிக்கை காலம் முடிவடைந்ததால் நிதியை விடுவிக்க முடியாதுள்ளது. எஞ்சிய வைப்புக்களை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதென.	நிதிப்பிரமாணங்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.13.2 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	புத்தளம் கைத்தொழில்துறை தோட்ட உள்சாலை அமைப்பு கட்டுமானச் செயற்திட்டத்தில் தொழிலாளர்கள் அண்ணளவாக 2,807 கன மீட்டர் ABC மற்றும் 6'' x 9'' கற்களை தாக்கல் செய்வது நடைமுறைக்கு ஏற்றதாகவும் சிக்கனமாகவும் இல்லாவிட்டாலும், மிகக்குறைந்த செலவில் இயந்திரங்களைப் பயன்படுத்தி இதைச் செய்ய முடியும் என்றாலும், அத்தகைய மதிப்பீடுகளைத் தயாரிக்காமல் தொழிலாளர்களால் செய்யப்படும் பணிக்கான மதிப்பீடுகளைத் தயாரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன்	தற்போது நிலவும் விலை பகுப்பாய்வின் பிரகாரம் பயில் இடுவதற்காக தொழிலாளர் பயன்பாட்டிற்காக மாத்திரம் விலை வழங்கப்பட்டுள்ளதுடன், இயந்திர பயன்பாட்டில் பயில் இடுவதற்காக விலை வழங்காதிருந்ததில் மதிப்பீடு செய்யும் போர்து அவ்வாறு இயந்திரம் மூலம் பயிலிடுவதற்கு விலையொன்றை இடமுடியாதென.	விகிதங்களை உருவாக்கி பயன்படுத்துவது நிறுவனத்தின் பொறுப்பாவதுடன் நட்டம் குறைவடையும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	குறித்த பணிக்காக ரூபா 1,072,400 செலுத்தப்பட்டது. அத்துடன் அதில் கூறப்பட்ட பொருட்களின் விநியோகம் பரிந்துரைக்கப்பட்ட அளவில் வழங்கப்பட்டதா என்பதும் முறையாக உறுதிப்படுத்தப்படவில்லை.		
